1984 மார்ச் 15]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கேள்விகள் பற்றி பைனான்ஸ் கமிஷன் ஆய்வுகளை மேற்கொண்டு இருக்கிறது. அவர்களது பரிசீலனைக்குப் பின்னால், அவர்களுடைய பரிந்துரைகளுக்கு ஏற்ப, அரசு முடிவுகளை மேற்கொள்ளும். நியாய விலை கிடைப்பது சம்பந்தமாக, நான் ஏற்கனவே சொன்னது போல், உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களுக்கு இன்னும் அதிகமான அளவில் நியாயமான விலைகள் கிடைக்கவும், அது தவிர இன்னும் பல்வேறு வகையான உதவிகள் செய்வதற்கு, அவர்களுக்கு வருமானம் கிடைப்பதற்கு, பொருளாதார வளர்ச்சியை உண்டாக்குவதற்கு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அதற்கேற்ப இந்த கார்ப்பரேஷன் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி பைனான்ஸ் கமிஷன் ஆய்ந்து கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் பழப்பண்ணைகள் அமைக்கும் திட்டம்.

320—(*வினா எண். 18648)—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பழப் பண்ணைகள் எத்தனை இடங்களில் அரசால் துவக்கப்பட உள்ளன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: திருச்சி, பெரியார் மற்றும் கோவை மாவட்டங்களில் பழப் பண்ணைகள் அமைக்க அரசால் அனுமதிக்கப்பட்டு இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 மாவட்டங்களில் தமிழக அரசின் சார்பாக பழப் பண்ணைகள் அமைக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த 3 மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டங்களில் அமைப்பதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களில் ஏற்கனவே இருக்கின்றன. இந்த 3 மாவட்டங்களில் அமைத்தால், தமிழகத்திலேயே இத்தகைய பழப் பண்ணை இல்லாத மாவட்டங்களே இல்லை என்ற நிலைமையை ஏற்படுத்துவதற்குத்தான் இந்த 3 மாவட்டங்களில் ஆரம்பிக்கிறோம். மற்ற மாவட்டங்களில் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கின்றன.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதியதாக துவக்கப்பட உள்ள 3 மாவட்டங் களில் பழப் பண்ணை அமைப்பதில் ஆகும் செலவு எவ்வளவு? மற்ற மாவட்டங்களில் ஏற்கனவே துவங்கப்பட்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கும் பழப் பண்ணைகளுக்கு ஆகிய செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர் களே, செலவினங்கள் பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பழப் பண்ணையை பெரியார் மாவட்டத்தில் புதியதாக ஆரம்பிக்கப் போவதாக மாண்புமிகு அமைச்சர் அவர் கள் சொன்னார்கள். பெரியார் மாவட்டத்தில், எந்த வட்டத் தில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது? எத்தனை ஏக்கர் பரப்பளவில் இந்தப் பழப் பண்ணை ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் வட்டத்தில் மோதூரில் ஆரம்பிக்கப்பட இருக் கிறது. நிலம் கையகப்படுத்துகின்ற பணி இப்போது மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. அது பற்றிய முழு விவரம் வந்த பிறகு அறிவிக்கப்படும்.

தாளவாடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் காபி பயிர் செய்யும் திட்டம்.

321—(*வினா எண். 21626)—திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாளவாடி ஊராட்சி ஒன்றியம், கோட்டாடை, மாவள்ளம், பெஜலட்டி போன்ற பகுதிகளில் காபி பயிர் செய்யும் திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், காபி வாரியத்தின் பங்கு இதில் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) காபி பயிர் செய்வது குறித்த தனியொரு திட்டம் ஏதுமில்லை. மலைப் பகுதிகளில் தோட்டக்கலை மேம்பாடு திட்டத்தின் கீழ் ஏனைய தோட்டக்கலை பயிர்கள் விநியோகத்துடன், காப்பி நாற்றுக்களும் விநியோகிக்கப்படுகின்றன.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.